

# விசுவாச வீரர்களோடு
# விசுவாச ஆண்டில்
# ஒரு விசுவாசப் பயணம்

முன்னுரை

விசுவாசத்தின் கதவுகள் நாம் அதன் உள்ளே சென்று கடவுளோடு உறவாடுவதற்கும், திருச்சபையில் நாம் நுழைவதற்கு வழியை ஏற்படுத்தித் தருவதற்கும் நமக்காக எப்போதும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. விசுவாசத்தின் தலைவாயிலைக் கடந்து செல்ல வேண்டுமானால், இறைவார்த்தை அறிவிக்கப்படவும், நமது இதயங்கள் இறைவன் பொழியும் அருளினால் நம்மையே மாற்றிக்கொள்ளவும் அனுமதிக்கவும் வேண்டும். இவ்வாறு நாம் விசுவாசத்தின் கதவுகள் வழியாக நுழைவது என்பது நமது வாழ்நாள் முழுவதும் நாம் மேற்கொள்ள வேண்டிய ஒரு பயணமாகிறது. திருமுழுக்கின் போது நாம் தொடங்கிய அந்தப் பயணத்தில் பல தளர்ச்சிகளும், தடைகளும் அன்றாடம் வரலாம். இந்த பாதையில் தெளிவு பெறவும், விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் கல்வாரிப்பாதை நமக்கு உதவுகிறது. உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் வாழ நம்மை அழைக்கிறது. திருச்சபையால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டவர்கள் விளக்குத்தண்டின் மேல் வைத்த தீபங்களாய் நமக்கு வழிகாட்டுகின்றனர். இவர்கள் நமக்காக விண்ணுலகில் பரிந்து பேசுபவர்கள். இவர்களின் வாழ்க்கையில் இருந்து நம் விசுவாசம் உறுதியடைய கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன. இவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுடன் தங்களை ஒன்றித்துக் கொண்டவர்கள். இயேசுவுக்காக தங்களையே இழந்தவர்கள். விசுவாச வாழ்வில் நமக்கு வழிகாட்டிகள், முன்னோடிகள். இவர்கள் வாழ்க்கையுடன் திருச்சிலுவை பாதையை தியானிப்பது நமக்கு மிகுந்த பலன் தரும். இவர்கள் நம்மை போல வாழ்ந்தவர்கள் தானே! இவர்களுக்கும் நமக்கு வரும் துன்பங்கள் தானே வந்திருக்கும்! அந்த சூழ்நிலைகளில் இவர்கள் எவ்வாறு வாழ்ந்தனர்? நமக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? நமது விசுவாசத்திற்கும், இவர்களது விசுவாசத்திற்கும் என்ன வேற்றுமை உள்ளது? விசுவாச வீரர்களோடு இந்த விசுவாச ஆண்டில் ஒரு விசுவாசப்பயணம் மேற்கொள்வோம்.

செபம்: தந்தையே! இயேசுவின் பெயரால் தூய ஆவியை எமக்கு தாரும். இந்த விசுவாசப் பயணத்தில் முழுமனதுடன் பங்கேற்க உம் ஆற்றலைத் தாரும். ஆமென்.

**முதல் நிலை**
**இயேசு சிலுவை சாவிற்கு தீர்ப்பிடப்படுகிறார்**

அன்று இறைமகன் இயேசு தான் செய்யாத குற்றத்திற்காக தண்டனைத் தீர்ப்பு பெற்றார். இத்தகைய ஒரு நிகழ்வை பொதுநிலையினரின் பாதுகாவலரான புனித தாமஸ் மூர் அவர்களின் வாழ்க்கையிலும் காணலாம். புனித தாமஸ் மூர் இங்கிலாந்து நாட்டில் ஒரு பெரிய பதவியை வகித்துவந்தார். அப்போது அந்நாட்டை ஆண்டுவந்த எட்டாவது ஹென்றி மன்னன் தன் முதல் மனைவி கத்தரினை பிள்ளையில்லாத காரணத்தால், தள்ளிவிட்டு வேறொரு பெண்ணை மணந்துகொள்ள பாப்பரசரின் இசைவினைக் கேட்டான். பாப்பரசர் மறுத்தபோது “தானே திருச்சபையின் தலைவன்” என்று கூறிக்கொண்டான். தாமஸ் மூர், அரசன் திருச்சபைக்கு எதிராக விடுத்த ஆணையை ஏற்றுக்கொள்ளவில்லை. அரச அவையில் தாம் வகித்திருந்த பெரிய பதவியிலிருந்து விலகினார். இதை சிறிதும் எதிர்பாராத அரசன், தன் நண்பன் என்றும் பாராமல் பல பொய் குற்றச்சாட்டுகளை தயார் செய்து அவரை சிறையில் அடைத்தான். புனிதர் 15 மாதங்கள் சிறையில் வாடி உடல்நலம் குன்றினார். பின்னர் அரசனின் ஆணைப்படி கொல்லப்பட்டார்.
“நாம் அனைவருமே கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பாக நின்றாக வேண்டும். அப்போது உடலோடு வாழ்ந்தபோது நாம் செய்த நன்மை தீமைக்குக் கைம்மாறு பெற்றுக்கொள்ளுமாறு ஒவ்வொருவரின் செயல்களும் வெளிப்படும்” 2 கொரி: 5: 10
புனித தாமஸ் மூர் இம்மண்ணுலக அரசனுக்கு கீழ்ப்படிந்திருந்தால், செல்வம், பதவி, புகழ் அனைத்தையும் அதிகமாக பெற்றிருந்திருக்கலாம். ஆனால் அவரோ விண்ணுலக அரசருக்கு சாட்சியாக வாழ விரும்பினார். கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பாக மாசற்றவராய் விளங்க விரும்பினார். அதனால் மண்ணுலகில் பழிச்சொல்லுக்கு இலக்காகி இருந்தாலும், விண்ணுலகில் நிலையான இன்பத்தை அடைந்தார்.
நாம் எத்தனை பேரை அநியாய தீர்ப்புக்கு ஆளாக்கி இருப்போம், எத்தனை முறை உண்மைக்கு குரல் கொடுக்க மறுத்து இருப்போம் இவ்வாறு செய்த போதெல்லாம் நமது விசுவாசம் செயலற்ற விசுவாசமாக மாறிவிட்டதாக உணர்ந்திருக்கிறோமா? சிந்திப்போம் .....

செபம்: கிறிஸ்துவே! எங்கள் நடுவரே! நாங்கள் அநியாய தீர்ப்புக்கு துணைப்போகாமல் இருக்க எங்களுக்கு அருள் தாரும்.

**இரண்டாம் நிலை**
**இயேசு சிலுவை சுமக்கிறார்**

**சிலுவை ஒரு அவமான சின்னம். அன்றைய யூதர்களுக்கு மட்டும் அல்ல, இன்று நம்மில் பலருக்கும் தான். நம் வாழ்வில் எத்தனை சிலுவைகள்! அவற்றை நாம் சுகமான சுமைகளாக நினைக்கிறோமா? அவற்றில் நாம் இறைவனின் திருவுளத்தை காண விழைகிறோமா?**
**"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார்" மத்: 16: 24**
**நாம் அனைவரும் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்கள் என்றால் கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் தங்கள் சிலுவைகளை தூக்கிக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும். புனித மார்கரீத் மரியம்மாள் – திரு இருதய பக்தி பரவ காரணமாய் இருந்தவர். அவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வு: "அன்று என்றும் போல நான் திவ்விய நற்கருணை உட்கொண்ட பின் நம் ஆண்டவரிடம் அன்பு உரையாடல் செய்துகொண்டிருந்தேன். அவர் எனது முழு சுதந்திரத்தையும், என்னுள் உள்ள அனைத்தையும் மீண்டும் அவருக்கு அர்ப்பணிக்க கேட்டுக்கொண்டார். நானும் அவ்வாறே செய்தேன். ஆண்டவர் என்னை அனைத்து துன்பங்களில் இருந்தும் காப்பது ஏன் என கேட்டேன். அவரோ என்னிடம் மலர்களால் மறைக்கப்பட்ட ஒரு சிலுவையை காட்டினார். அந்த சிலுவையில் கூரிய ஆணிகள் இருந்தன. அதை என் பக்கம் நீட்டி: இதோ என்னைப் பின்பற்றுபவர்களின் மலர் மஞ்சம். இதன் மீது தான் என் அன்புதீ உன் தகன பலியை உட்கொள்கிறது. அந்த அன்புக்கனலால் மலர்கள் அனைத்தும் கருகி உன் பலவீனத்தால் உண்டான ஆணிகள் மட்டுமே இருக்கும். அந்த வேதனையை தாங்க என் அன்பே உனக்கு போதும் என்றார். அக்கணமே அவர் அன்பின் நிமித்தம் அந்த சிலுவை ஒன்றே எனக்கு போதும் என நான் முடிவு செய்தேன்". நமது சிலுவைகளில் இயேசுவின் அன்பு நமக்கு துணை நிற்கும் என நாம் நினைக்கின்றோமா? சிலுவைகளை ஏற்க துணிகிறோமா? சிந்திப்போம் ....**

**செபம்: சிலுவை சுமந்த இயேசுவே! எங்கள் அன்றாட சிலுவைகளை சுமக்க ஆற்றலைத் தாரும்.**

**மூன்றாம் நிலை**
**இயேசு முதல் முறை விழுகிறார்**

**வீழ்ச்சி நமக்கு அன்றாடம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இயேசு நிலத்தில் விழுந்தார். ஆனால் மீண்டும் எழுந்து தன் பயணத்தை தொடர்ந்தார். 'நான் முதல் முறை அந்தப் பாவத்தை செய்தேன். அப்போது எனக்கு மனவாட்டமும், குற்றவுணர்வும் இருந்தது. மீண்டும் மீண்டும் செய்தேன். அது எனக்கு ஒரு பழக்கமாகவும், என்னுள் ஒன்றாகவும் ஆகிவிட்டது'. இதோ அப்பாவப் பழக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் நமக்கு வழிகாட்ட வருகிறார் புனித அலோஷியஸ் கொன்சாகா. சிறுவன் அலோஷியஸ் அரச குடும்பத்தை சார்ந்தவன். தந்தை சிறுவயதில் இருந்தே மகனை வீர விளையாட்டுகளில் சிறந்தவனாகவும், தைரியம் நிறைந்தவனாகவும் வளர வேண்டும் என விரும்பினார். எனவே தன் படையாட்கள் உள்ள இடத்திற்கு அடிக்கடி அழைத்துச் செல்வது வழக்கம். அப்போது சிறுவன் தன்னையும் அறியாமல் சில தகாத வார்த்தைகளை அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டான். அதை அறிந்த தாய், மகனை கடிந்து கொண்டு சிறு பாவமும் எவ்வாறு கடவுளை மனம் நோக செய்யும் என்று புகட்டினாள். அன்று முதல் சிறுவன் தன் ஆன்மாவை தூய்மையாக வைக்கவும், சிறு பாவம் முதலாய் விலக்கவும் தொடங்கினான். இது பிற்காலத்தில் இளைஞர்களின் பாதுகாவலராக வளரும் அளவிற்கு அவருக்கு உதவியது. நமது எழுச்சியை நோக்கிய பயணத்திற்கு இவ்விவிலிய வரிகள் உதவும்: "ஆண்டவர் சோர்வுற்றவருக்கு வலிமை அளிக்கின்றார்; வலிமையிழந்தவரிடம் ஊக்கம் பெருகச் செய்கின்றார். இளைஞர் சோர்வுற்றுக் களைப்படைவர்; வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர். ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள் போல் இறக்கை விரித்து உயரே செல்வர்; அவர்கள் ஓடுவர்; களைப்படையார்; நடந்து செல்வர்; சோர்வடையார்." எசாயா: 40: 29 — 31**
**நாம் பாவ வீழ்ச்சியில் இருந்து எழுவதற்கு திருச்சபை நமக்கு தந்துள்ள ஒரு மாண்புமிகு அருட்சாதனம் 'ஒப்புரவு'. 'பாவ பொறுத்தலை விசுவசிக்கிறேன்' என்று ஒவ்வொரு ஞாயிறு விசுவாச அறிக்கையிலும் பாடினால் மட்டும் போதாது. செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம். நான் நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து தேவ நற்கருணையை உட்கொள்கின்றேனா? சிந்திப்போம் ....**

**செபம்: எங்களை தூக்கிவிட வந்த இயேசுவே! நாங்கள் நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து உம்மை உட்கொள்ளும் ஆர்வத்தை தாரும்.**

**நான்காம் நிலை:**
**இயேசு தன் தாயை சந்திக்கிறார்**

"நீங்கள் ஏன் என்னை தேடினீர்கள், நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா?" என்று அன்று தன் பன்னிரண்டு வயதில் வினவினார் இயேசு. அதனால் தான் என்னவோ அனைத்தையும் தன் உள்ளத்தில் பதித்து வைத்திருந்த அன்னை, தந்தையின் அலுவலில் ஈடுபட்டிருக்கும் மகனை ஒரு வார்த்தைக் கூட பேசாமல் வழியனுப்ப வருகிறார். தாய்க்கு அன்பு வற்றிப்போகாது. தனது பிள்ளையை அவள் மறக்கமாட்டாள். தாய் மறந்தாலும் இறைவன் மறக்கமாட்டார் என்பதை ஏற்று தன் மகனின் மனமாற்றத்திற்காக வேண்டினாள் அந்தத் தாய். ஒரு வருடம் அல்ல, இரண்டு வருடம் அல்ல, பதிமூன்று வருடங்கள். இறைவன் தன் மகனை நிச்சயம் மனமாற்றுவார் என்ற ஆழமான விசுவாசம். அதுவும் ஒரு நாள் நடந்தது. 'நேர்மையாளருடைய வல்லமைமிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும்' என்று யாக்கோபு தன் திருமுகத்தில் கூறுவது போல தன் செப வல்லமையால் திருச்சபைக்கு புனித அகுஸ்தீனார் என்ற மறைவல்லுனரை தந்தவர் தான் புனித மோனிக்கம்மாள். அவர் ஒரு விசுவாச வாழ்விற்கு சான்று. தனது இறுதிக்காலத்தில் தன் மகனிடம் அந்த தாய் சொன்னவை: "நான் இன்னும் என்ன செய்ய வேண்டும் என எனக்கு தெரியாது. நான் இன்னும் ஏன் உயிர் வாழ்கிறேன் என்பதும் எனக்கு தெரியாது. எனது எல்லா நம்பிக்கையும் எனக்கு கிடைத்துவிட்டது. நான் விரும்பியது எல்லாம் உன்னை ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவனாகவும், விண்ணக தந்தையின் மைந்தனாகவும் காண வேண்டும் என்பதே! உன்னை தன் பணிக்கு அழைத்ததன் மூலம் கடவுள் நான் வேண்டியதைவிட மிகுந்த பதிலன்பை காட்டிவிட்டார். கடவுளால் இயலாதது ஒன்றும் இல்லை". ஆம் கடவுளால் இயலாதது ஒன்றும் இல்லை. மண்ணில் இருந்து மனிதனை படைத்தவர், அப்பத்தையும், இரசத்தையும் தன் உடலாகவும், இரத்தமாகவும் மாற்றுபவர். நமது விசுவாசம் நம்மை கடவுளிடம் அழைத்துச் செல்லும். இதை நாம் உணர்கிறோமா? அன்பு பெற்றோர்களே! உடலளவிலும், உலகளவிலும் நம் பிள்ளைகளை பார்த்து பார்த்து வளர்க்கும் நாம் அவர்கள் ஆன்ம வாழ்வில், விசுவாசத்தில் வளர்ச்சி அடைய என்ன செய்கிறோம்? சிந்திப்போம் ....

செபம்: அன்னையை சந்தித்த இயேசுவே! எங்கள் பிள்ளைகளுக்கு ஆன்ம வாழ்வில் வழிகாட்ட எங்களுக்கு கற்றுத்தாரும்.

**ஐந்தாம் நிலை**
**இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்**

**கானாவில் தண்ணீரை திராட்சை இரசமாக்கி உதவியவர், குருடருக்கும், செவிடருக்கும், முடவருக்கும் குணம் தந்து உதவியவர், 'இயேசுவே!' என்று அழைத்தவருக்கு எல்லாம் உதவியவர், இன்று ஒரு அயலானிடம் உதவி பெறுகிறார். இது கட்டாயத்தினால் வந்த உதவி. ஆனால் தன்னலம் துறந்து, சாதி, மதம், பிரிவு பாராமல் உதவியவர் தான் முத்திபேறுபெற்ற குஞ்சச்சன். இவர் இந்தியாவின் கேரள மண்ணில் மறைப்பணியாற்றியவர். இவர் காலத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டு பல இன்னல்களை சந்தித்து வந்தனர். பலரும் நிலக்கிழார்களிடம் அடிமைகளாக வேலை செய்து வந்தனர். அவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டிருந்தது. மேலும் மேல்தட்டு மக்கள் இச்சமுதாயத்தினருடன் படிக்க விரும்பவில்லை. இத்தகைய வேற்றுமை களைய கல்வியறிவு புகட்டுவதே தலைசிறந்த வழி என்று உணர்ந்த குஞ்சச்சன் சிறப்பு பள்ளிகளை இவர்களுக்கு என பங்கின் பல பகுதிகளிலும் நிறுவி, சிறப்பு ஆசிரியர்களை நியமித்தார். தினமும் அவர்களின் வீடுகளை சந்தித்து அவர்களுடன் பேசுவதன் மூலம், அவர்களிடம் இருந்த துயரங்களை கண்டுகொண்டார். நோயாளிகளை பேணுவதிலும், மறைக்கல்வி மற்றும் நல்லொழுக்கம் புகட்டுவதிலும், தனக்கு கிடைக்கும் சிறிய பணம் மற்றும் உணவை அவர்களுடன் பகிர்வதன் மூலமும் தன் மேய்ப்பு பணியை செய்தார். இதனால் ஆயிரக்கணக்கில் இச்சமுதாயத்தினர் திருச்சபையில் இணைந்தனர். இம்மக்களுக்கு அவர் எல்லாம் ஆனார். பல எதிர்ப்புக்களை இறைவனின் துணையுடன் எதிர்கொண்டார். என் செப வாழ்வு பணி வாழ்விற்கு அழைத்துச் செல்ல வேண்டும். கொடுப்பதை பற்றி விவிலியம் கூறுவதை ஆழ்ந்து கேட்போம்: "நீ அவனுக்குத் தாராளமாய்க் கொடு. அவனுக்குக் கொடுக்கும் போது உள்ளத்தில் பொருமாதே. அப்போது, நீ செய்யும் அனைத்துச் செயல்களிலும், மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவார்" — இணைச்சட்டம்: 15: 10**
**நான் யாருக்கு செய்தால் எனக்கு அவர் திரும்ப செய்வார், என்று முகம் பார்த்து செய்கிறேனா? பிறருக்கு உதவ யோசிக்கிறேனா? சிந்திப்போம் ...**

**செபம்: எங்களுக்கு உதவ வந்த இயேசுவே! நாங்கள் பிறருக்கு உதவ எங்களுக்கு ஆர்வத்தை தாரும்.**

**ஆறாம் நிலை**
**வெரோனிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறார்**

**முகம் முழுவதும் வியர்வையும் இரத்தமுமாய் தோய்ந்து காணப்படுகிறது. அவர் தோற்றம் உருகுலைந்தவராய் அனைவரின் பார்வைக்கும் தென்பட்டார். ஐயோ பாவம் என்று அனுதாபப்பட்ட மக்கள் கூட்டத்தினர் மத்தியில், போர் வீரர்களின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாத நெஞ்சமாய் இயேசுவின் முகத்தை துடைக்க வருகிறார் வெரோனிக்கா. இன்றும் நமது வீதிகளில், சாலை ஓரங்களில் பல புழுதி படிந்த முகங்களை நாம் பார்க்கிறோம். அரையாடை மனிதர்களாய், பசிப்பிணி கொண்டோராய் பலர் நம் வாழ்வில் கடந்து செல்கின்றனர். நாமோ பரிதாபப் பார்வையை மட்டும் தெளித்துவிட்டு, கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், கை கால்கள் இருந்தும் முடவர்களாய் இருக்கிறோம். நம் விசுவாசம் செயலிழந்துவிட்டதா? இதோ நவநாகரிக உலகில் வாழ்ந்த வீரமங்கை வெரோனிக்கா. ஐந்து ரூபாயுடன் தன் பணிவாழ்வை தொடங்கியவர். “நான் பசியாய் இருந்தேன், எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன் எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள், அன்னியனாய் இருந்தேன் என்னை வரவேற்றீர்கள், ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினீர்கள், நோயுற்று மற்றும் சிறையில் இருந்தேன் என்னை பார்க்க வந்தீர்கள்”. இந்த வார்த்தைகளால் ஈர்க்கப்பெற்று, அழைத்தலுக்குள் அழைத்தலைக் கண்ட முத்திப்பேறுபெற்ற அன்னை தெரசா ஒரு முறை கொல்கத்தா குப்பைத் தொட்டியின் அருகில் ஒரு முதியவர் சாகும் நிலையில் பராமரிப்பு இன்றி கிடப்பதை பார்த்தார். அவரது உடலில் இருந்து தாங்கமுடியாத நாற்றம் வந்துகொண்டிருந்தது. அவரது தோற்றம் பலருக்கு அருவெருப்பை தந்தது. அனால் அன்னை அவரை மறுகிறிஸ்துவாகவே கண்டார். அவரது புண்களை கழுவி துடைத்து அவருக்கு உணவளித்து, வேண்டிய மருத்துவ உதவி செய்தார். அன்னையின் கரங்களிலேயே அவர் தன் உயிரை இழந்தார். அவர் மரணமடையும் முன் “அம்மா! நான் கடவுளை இதுவரையில் சிலை வடிவில் தான் பார்த்திருக்கிறேன். இப்போது தான் நேரில் காண்கிறேன்”, என்று கூறியதாக உடனிருந்த சகோதரிகள் கூறினர். நாம் பெரிய பெரிய செயல்களை செய்வதன் மூலம் சாட்சிய வாழ்வு வாழ வேண்டும் என்று அவசியம் இல்லை. சிறு சிறு செயல்களை ஆழ்ந்த இறைநம்பிக்கையுடனும் பற்றுதலுடனும் செய்தாலே போதும். நாம் அவ்வாறு நடக்கிறோமா? சிந்திப்போம்....**
**செபம்: இயேசுவே! துயருரும் எம் சகோதர சகோதரிகளில் உம்மைக் காணும் வரம் தாரும்.**

**ஏழாம் நிலை**

**இயேசு இரண்டாம் முறை குப்புற விழுகிறார்**

**சிலுவையின் பளு அவரை அழுத்துகிறது. இதுவரை உதவிய சீமோன் இப்போது இல்லை. இனி வேறு சீமோனும் வரப்போவதில்லை. தள்ளாடுகிறார் மீண்டும் தடுமாறி விழுகிறார் இயேசு. நாமும் உலக மாய கவர்ச்சிகளில் வீழ்ந்துகிடக்கிறோம். இதோ உலக வீழ்ச்சியிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இப்புனிதை என்னவெல்லாம் செய்தார் எனப்பார்போம்: ஒருநாள் அவளது அன்னை, மகளின் அழகை வீட்டிற்கு வந்த நண்பர்கள் முன்னிலையில் எடுத்துக் காட்டும் நோக்கத்தோடு அழகான மலர்மாலையைத் தலைக்குச் சூட்டினாள். அச்சமயத்தில், ஒறுத்தல் செய்யும் கருத்தோடு கூரான ஊசியொன்றை மாலையின் ஊடே அழுத்திக் குத்திக் கொண்டார் இப்புனிதை. வீட்டிற்கு வருபவர்கள் அடிக்கடி தன் அழகைப் புகழ்ந்து கொண்டிருப்பதைக் கவனித்தாள் சிறுமி. இந்தப் புகழ்ச்சிகளெல்லாம் தன் ஆன்மாவுக்கு இறுதியில் ஆபத்தாக முடியக்கூடும் என்று உணர்ந்து தன் அழகைக் கெடுத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்து தன் முகத்தை விகாரப்படுத்த மிளகைத் தூளாக்கி நன்றாகத் தேய்த்துக் கொண்டார். தனக்கிருந்த அழகான கூந்தலையும் வெட்டிவிட்டார். இத்தகைய முயற்சிகளால் வெளிப்படையாக உண்டாகக் கூடிய சோதனைகளையும், ஐம்புலன்களால் ஏற்படக்கூடிய ஆன்மீக ஆபத்துக்களைத் தவிர்க்க முடிந்தாலும், உள்ளத்தில் ஏற்படக்கூடிய சுயநல மனப்பான்மை, தான் என்ற ஆணவம் முதலிய உணர்வுகளை முழுமையாக அடக்கி ஒழித்தாலொழிய எவ்வித ஆன்ம நலனும் ஏற்படாது என்று நன்கு உணர்ந்து உபவாசத்திலும், செபத்திலும், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், சுயவிருப்பத்தை அடக்குதல் முதலான புண்ணியங்களை அனுசரிப்பது மட்டுமே உண்மையான புனிதம் என்று அறிந்து அந்த முயற்சிகளில் முழு மூச்சாக ஈடுபடலானாள். இவர் தான் லீமா புனித ரோஸ். நாம் வீழ்ச்சியில் இருந்து காத்துக்கொள்ள எவற்றை அணிகலன்களாக கொள்ள வேண்டும்? "உண்மையை இடைக்கச்சையாக கட்டிக்கொண்டு, நீதியை மார்பு கவசமாக அணிந்து நில்லுங்கள். அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாக போட்டுக்கொள்ளுங்கள். எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தை பிடித்துக் கொள்ளுங்கள். மீட்பைத் தலைச்சீராவாகவும், கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர் வாளாகவும் எடுத்துக்கொள்ளுங்கள்". எபேசியர்: 6: 14 — 17. நாம் விசிவாச அணிகலன்களை அணிய தயாராக இருக்கிறோமா? சிந்திப்போம் ....**

**செபம்: வீழ்ந்து எழுந்த இயேசுவே! நாங்கள் விசுவாசத்தின் அணிகலன்களை அணியும் ஆர்வத்தை எமக்கு தாரும்.**

## எட்டாம் நிலை
## இயேசு எருசலேம் நகர பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

எவரும் ஆழ்ந்த துயரில் இருக்கும் போது யாராவது எனக்கு ஆறுதல் கூற மாட்டார்களா? யாராவது எனக்கு துணையாக இருக்க மாட்டார்களா? என்று எண்ணி புலம்புவது வழக்கம். ஆனால் நம் அண்ணல் இயேசு தனக்கு ஆறுதல் கூற வந்த பெண்களிடம், அவர் ஆறுதல் கூறுகிறார். தன் துயரில் அடுத்தவரை எதிர்ப்பார்ப்பவன் மனிதன். தன் துயரில் அடுத்தவருக்கு துணை செய்பவன் புனிதன். இதோ துயரத்தில் ஆறுதலாய் இருந்த புனித தமியான். ஒரு காலத்தில் தொழுநோய் இறைவனிடம் இருந்து வந்த சாபமாக கருதப்பட்டது. இம்மக்கள் அனைவராலும் புறக்கணிக்கப்பட்டு எந்தவொரு அடிப்படை தேவையும் இன்றி வாழ்ந்து வந்த காலங்களும் உண்டு. இந்த ஒரு சூழலில் தான் தந்தை தமியான் ஹவாய் தீவில் உள்ள மொலக்காய் என்ற பகுதியில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதற்கு என தன் வாழ்வை அர்ப்பணித்தார். 1884 டிசம்பர் திங்கள் அன்று சுடுத்தண்ணீரில் தன் கால்களை எப்போதும் போல கழுவிக்கொண்டிருந்தார். அனால் தன் கால்கள் அந்த நீரின் தன்மையை அறிய மறுத்தன. அப்போதுதான் தனக்கும் தொழுநோய் வந்ததை உணர்ந்தார். நோய் இன்னும் தீவிரம் அடைந்தால் தன்னால் பணிகளை செய்ய முடியாது என்று முன்னே உணர்ந்து, மேற்கொண்ட திட்டங்களை துரிதமாக முடிக்க நினைத்தார். அப்போது தன் சபை தலைவருக்கு கடிதம் ஒன்றை வரைந்தார்: "கலக்குவா மன்னர் என் பணிகளை பாராட்டி முன்பு எனக்கு ஒரு விருதினை அளித்தார். இப்போது நான் தொழுநோய் என்னும் விருதினை அடைந்துள்ளேன். இக்காயங்களை காணும் போது நான் நம் ஆண்டவரின் ஐந்து காய வரத்தை பெற்றுவிட்டேன் என்னும் எண்ணம் என்னுள்ளே உருவாக்குகிறது. நான் இன்னும் நலமாகத்தான் இருக்கிறேன். என்னை நேரம் கிடைக்கும் போது பார்த்துக்கொள்கிறேன். எனினும் நான் தொடர்ந்த பணியை ஒருபோதும் கைவிடமாட்டேன். இன்னும் அதிக ஆர்வத்துடன் செய்வேன்". தன் துன்பத்திலும் பிறருக்கு ஆறுதலாய் வாழத்தூண்டும் விசுவாசம் – என்னே உயர்வானது. நமக்கு வரும் துன்பத்திற்கும் விசுவாசத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. 'துன்பத்தால் மன உறுதியும், மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம்' உரோமையர்: 5: 4. எனது விசுவாசம் என்னை துன்பத்தில் இறைஉதவி நாட தூண்டுகிறதா? பிறருக்கு சுமையாக இல்லாமல் வாழ கற்றுத்தருகிறதா? பிறரின் சுமையை பகிர்ந்து கொள்ள தூண்டுகிறதா? சிந்திப்போம்...

செபம்: ஆறுதல் தரும் இயேசுவே! பிறருக்கு ஆறுதலாக இருக்கும் வரம் தாரும்

**ஒன்பதாம் நிலை**
**இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்**

**இது இயேசுவுக்கு இறுதி வீழ்ச்சி அல்ல. இன்றும் அவர் அனுதினம் விழுந்துகொண்டுதான் இருக்கிறார். ஆம். நான் கடவுளுக்கு தர வேண்டிய இடத்தை வேறு உலக பொருட்களுக்கோ ஆட்களுக்கோ கொடுத்து இயேசுவை விழச்செய்தேன். என்னை நேசிப்பதைப் போல பிறரை நேசிக்க மறந்தேன் இயேசுவை விழச்செய்தேன். அவர் போதனைகளை நாம் ஏற்காதபோதெல்லாம், அவரை விழத்தான் செய்கிறோம். திருவிவிலியம் கத்தோலிக்க விசுவாசத்தின் ஊற்றாகும். நம் விசுவாச வாழ்வில் திடம் பெறவும், புதிப்பிக்கப்படவும் உதவுவது விவிலியம். விசுவாச தளர்ச்சியில் நம்மை தூக்கிவிடுவது விவிலியம். பல புனிதர்களை உருவாக்கியது திருவிவிலியம் தான். அவற்றில் சில:**
**இந்திய மண்ணின் முதல் மறைசாட்சி முத்திபேறுபெற்ற தேவ சகாயம் பிள்ளை யோபு நூலை வாசித்ததன் மூலம் கிறிஸ்தவ மறையின் மேல் நாட்டம் கொண்டு திருமுழுக்கு பெற்றார். "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும்" [மத்:19:21] புனித வனத்து அந்தோணியாரை துறவறம் ஏற்க தூண்டிய வசனம். "மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?" [மத்: 16:26] புனித லொயோலா இஞ்ஞாசியார் புனித சவேரியாரை மனம்மாற்ற பயன்படுத்திய வசனம். புனித இலாரிக்கு 'வாழ்க்கையின் உண்மை இரகசியம் எது?' என்ற வினா உள்ளத்தில் ஓயாமல் எழுந்தது. அதற்கு விடை காணத் திருமறையை படித்தார். அங்குதான் தம் வினாக்களுக்கான பொருத்தமான விடைகள் கிடைத்தன என்று குறிப்பிடுகிறார். "இரவு முடியப்போகிறது; பகல் அண்மையில் உள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக. பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்துகொள்வோமாக! களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச்சச்சரவு ஆகியவற்றை தவிர்ப்போமாக. தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்" [உரோ: 13: 12 - 14] புனித அகுஸ்தீனாரை மனமாற்றிய திருவசனம். நாமும் விசுவாசத்தில் உறுதியடைய, தேடலில் தெளிவு பெற திருவிவிலியத்தை நாடுவோம். ஏனெனில் 'மறைநூலை அறியாதவன்; கிறிஸ்துவை அறியாதவன்'. நாம் திருமறையை அன்றாட வாழ்க்கையில் வாசிக்கிறோமா? சிந்திப்போம்....**

**செபம்: வார்த்தையான இயேசுவே! இறைவார்த்தையை ஆர்வமுடன் வாசிக்கும் மனதை தாரும்.**

**பத்தாம் நிலை**
**இயேசுவின் ஆடைகளை களைகிறார்கள்**

அவமானப்படுத்துவதும், அவமானப்படுவதும் நமக்கு வழக்கம் தானே! இதோ உடலளவில் இதுவரை இயேசுவை வருத்தியவர்கள் இப்போது உள்ளத்தளவிலும் வருத்த கையாண்ட யுக்திதான் இந்த ஆடை உரியும் நிகழ்வு. அவரோ சிறுமைப்படுத்தப்பட்டாலும் தம் வாயைத் திறக்கவில்லை. அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறிபோலும் இருந்தார். இதோ அவர் வழியை பின்பற்றி துன்பத்திலும் வாய்திறவாத செம்மறிகள்... இன்று அனைவராலும் இந்தியாவின் முதல் பெண் புனிதையாக கொண்டாடப்படும் புனித அல்போன்சா தான் வாழ்ந்த காலத்தில் வெளிவேடக்காரி என்றும் பிறர் அனுதாபத்தை பெற நடிப்பவர் என்றும் துறவற வாழ்வில் தன் உடன் சகோதரிகளால் புறக்கணிக்கப்பட்டாள் என்று நம்மில் எத்தனைப்பேருக்குத் தெரியும்? இதைப் போலவே திருக்குடும்ப சபையை தோற்றுவித்த இந்தியாவின் முத்திபேறுபெற்ற மரியம் தெரசியா வாழ்விலும் நடந்தது. இவரது விசுவாசமும் தூய வாழ்வும் கலங்கமடைய 'கடவுளின் இரக்கம் என்னைவிட்டு நீங்கிவிட்டதா' என்று சந்தேகிக்கும் அளவுக்கு அலகை இவருக்கு பல தொல்லைகளைத் தந்தது. இவற்றைப் பார்த்த அயலார் பலரும் ஏதோ பகற்கனவு காண்கிறார் என்று முத்திரை பதித்தனர். ஏன், இவரை அறிந்த ஆயர்கூட, "ஒரு வேளை சம்மனசுபோல் உன்னிடம் வந்து சாத்தான் வலை விரிக்கின்றானா" என்று கேட்டாராம். புனித மார்கரீத் மரியா எனக்கு இருதய அரசர் காட்சி கொடுத்தார் என்று கூறிய போது இவர்மேல் தீய ஆவி வந்துவிட்டது என்று சொல்லி இவர் மேல் தீர்த்தம் தெளித்து கேலிசெய்தார்கள். புனித ஜெம்மா கால்கானிக்கு உடல் நோய் காரணமாக துறவற நிலை மறுக்கப்பட்டது. புனித ஆக்னஸ் பன்னிரண்டே வயது சிறுமியாய் இருந்தாலும் இயேசுவை தவிர வேறு துணை எனக்கு இல்லை. வேற்று தெய்வங்களுக்கு பலியிடமாட்டேன் என்று கூறியதால் சிறையில் இடப்பட்டு துன்புறுத்தப்பட்டார். இவர் அஞ்சாததைக் கண்ட மன்னன், இவரை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தெருவில் ஆடைகளின்றி நிற்கச்செய்தான். அப்போதும் 'நான் நம்பும் கிறிஸ்து என்னைக் காப்பார்' என்று உரக்க கூறினார். இத்தனை உடல் மன வலிகளை உண்டாக்கியவர்களை மன்னித்து அவர்களுக்காக செபிக்க இவர்களுக்கு யார் கற்றுத்தந்தது. இவர்கள் அல்லவா குன்றின் மேல் வீட்டைக் கட்டியவர்கள். மழை பெய்தது; ஆறு பெருக்கெடுத்து ஓடியது; பெருங்காற்று வீசியது; ஆனால் இவர்கள் விழவில்லை. இவர்கள் விசுவாசம் இவர்களை நிலைநிறுத்தியது. எனது விசுவாசம் இவ்வளவு ஆழமானதாக உள்ளதா? சிந்திப்போம் ...

செபம்: எங்கள் விசுவாச நாயகனே! எங்கள் விசுவாசத்தை அதிகமாக்கும்

## பதினொன்றாம் நிலை
## இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

"சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்" 1 பேதுரு: 2: 24

நம் பாவங்களுக்காக சிலுவையில் தன்னையே கையளிக்கிறார் இயேசு. பிறருக்கு உதவ நீண்ட கைகளும், விரைந்து சென்ற கால்களும் இப்போது சிலுவையுடன் இணைக்கப்பட்டுவிட்டன. இந்நிலையிலும் மானுடம் அனைத்திற்கும் உதவி செய்ய வேண்டும் என்ற வேட்கையில் பாவபரிகார பலியாகிறார். டிசம்பர் 1 – 1911. அன்று ஒரு வெள்ளிக்கிழமை. "இயேசுவே உம்மை நான் அன்பு செய்கிறேன். ஆனால் இது போல சிலுவையில் நீர் வேதனைப்படும் காட்சிகளை எனக்கு தரவேண்டாம். எனது இதயம் கிழிகிறது. உம் வாழ்க்கை முழுதும் நீர் சிலுவை சுமந்து சென்றீர் என்பது உண்மையே. ஒரு பகலும் ஒரு இரவும் தான் நீர் பாடுபட்டீர் என கூறப்படுவது தவறு. உமது பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நீர் சம்மதித்தால் அந்த ஆணிகள் என் கரத்தில் இடம் பெறட்டும். ஆம் உம் விருப்பம் இருந்தால். ஆனால் வெளியே தெரிய வேண்டாம்." என்று புனித பியோ வேண்டினார். செப்டம்பர் 20 – 1918அன்று துறவிகள் செபக்கூடத்தில் திருப்பலிக்குப் பின் நன்றி செலுத்திக் கொண்டிருக்கும் போது பாடுபட்ட சுரூபம் உயிர்பெற்று ஒளிவீசியது. அவ்வொளி தனது உடலின் உறுப்புக்கள் மீது பாய்ந்து ஐந்துக் காயங்களைப் பதித்ததாக கூறினார் புனித பியோ. ஐந்து காயங்களைப் பற்றி மகிழ்ச்சி கொண்டாலும் பிறர் காணும் விதத்தில் அவை அமைந்தது குறித்து வருந்தினார். தன்னைப்பற்றி பலரும் பலவிதமாக பேசுவது, நடந்துக் கொள்வது அவருக்குத் தெரிந்தும் ஒன்றுமே நடவாதது போல தன் காரியங்களில் கருத்தாய் இருந்தார். பலரும் இவருக்கு பல சங்கடங்களை தந்த போதும். ஏன் ஆன்ம வறட்சி நிலையில் இருந்தபோதும், திருச்சபை இவருக்கு பல தடைகளை விதித்திருந்த போதும் இயேசுவின் பாடுகளுடன் ஒன்றித்து விசுவாச வாழ்விற்கு சான்று பகர்ந்தார். இவரைப் போலவே புனித அசிசியார், புனித சியன்னா காத்தரின், புனித ஜெம்மா கால்கானி போன்றோர் பலரும் இயேசுவின் பாடுகளுடன் ஒன்றித்து இருக்கின்றனர். "நான் உன்னைப் புடமிடுவேன் ஆனால் வெள்ளியைப்போலல்ல, துன்பம் என்னும் உலை வழியாய் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்". [எசாயா: 48: 10] உண்மையான விசுவாச வாழ்வு என்பது மலர் மேல் அமைந்த அகன்று விரிந்த பாதை அல்ல. கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான குறுகிய பாதை தான். அந்தப் பாதையில் பயணிக்க நான் தயாராக இருக்கிறேனா? சிந்திப்போம் ...

செபம்: சிலுவையில் அறையுண்ட இயேசுவே! துன்பங்களில் உம்மைக் காணும் வரம் தாரும்

**பன்னிரண்டாம் நிலை**
**இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்**

**“எல்லாம் நிறைவேறிற்று. தந்தையே! உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்”, என்று கூறி உயிர்விடுகிறார் இயேசு. இதுவே இயேசு உயிர்விடும் முன் உரைத்த இறுதி வார்த்தைகள். இப்போது பல புனிதர்கள் தங்கள் உலக வாழ்வின் இறுதி நொடிகளில் உரைத்தவற்றை கேட்போம்.**
**“ஆ! என்னே அழகான வானுலக காட்சியைக் காண்கிறேன்” — புனித தோமினிக் சாவியோ. “எல்லாம் நல்லது தான். நான் குறுகிய காலத்திற்குத் துன்பங்களை அனுபவிக்க விரும்பவில்லை. ஆ! நான் அவரை நேசிக்கிறேன். என் இறைவா நான் உம்மை அன்பு செய்கிறேன்” — புனித குழந்தை தெரசா. “என்னைப்பற்றிய கடவுளின் திருவுளத்தை நான் ஏற்கிறேன்” — சாலே நகர் புனித ஜான் பாப்டிஸ்ட். “அமைதியில் செல்லுங்கள். ஏனெனில் உங்களுக்கு ஒரு நல்ல வழிகாப்பாளர் இருக்கிறார். உம்மை படைத்தவர் தன் தூய ஆவியை தந்து ஒரு தாய் தன் குழந்தையை காப்பது போல காத்து வருகிறார். என்னை படைத்த இறைவா! நீர் வாழ்த்தப்பெறுவீராக” — புனித கிளாரா. “இரக்கத்தில் கிறிஸ்து இருக்கிறார்” — புனித குவனெல்லா. “அனைவருக்கும் சகோதர அன்பு காட்டுங்கள். அனைவருக்கும் நன்மை செய்யுங்கள். ஒருவருக்கும் தீங்கு விளைவிக்காதீர்கள். என் பிள்ளைகளிடம், நான் அவர்களுக்காக விண்ணுலகில் காத்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்” — புனித தொன் போஸ்கோ. “இப்போது எனக்கு மகிழ்ச்சியும் அமைதியும் கிடைத்துள்ளது” — முத்திபேறுபெற்ற குரியாகோஸ் சாவரா. “தந்தையின் வீட்டிற்கு நான் செல்லட்டும்” — முத்திபேறுபெற்ற இரண்டாம் ஜான் பால். “ஓ என் கடவுளே!” — புனித இஞ்ஞாசியார். “என் ஆண்டவரை நான் காண்கிறேன்” — புனித அந்தோணியார். “கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருங்கள். தூய திருச்சபைக்கு கீழ்ப்படியுங்கள். அமைதியிலும், பிறரன்பு பணிகளிலும் நிலைத்திருங்கள்” — புனித ரீட்டா. “மகிழ்ச்சியாய் இருங்கள். விசுவாசத்தில் நிலைத்திருங்கள். நான் செய்தது போலவே நீங்களும் சிறு காரியங்களை செய்யுங்கள்” — புனித டேவிட்.**
**அனைத்து புனிதரும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றியதில் மகிழ்ச்சியும், விண்ணக வாழ்வில் அடியெடுத்து வைக்கப்போகிறோம் என்ற ஆனந்தமும் அடைந்தவராய் மரணத்தை எதிர்கொண்டிருக்கின்றனர். இவர்களின் விசுவாச மாதிரியை பின்பற்றி விண்ணுலகமே நம் தாய் வீடு என்பதை உணர்ந்து அதற்கு தகுந்த தயாரிப்புக்களை செய்கிறோமா? இறைவன் எதற்கு என்னை படைத்தார்? எனக்கு அவர் வைத்துள்ள திருவுளம் என்ன? என்று அறிய முற்படுகிறோமா? சிந்திப்போம் ...**
**செபம்: எங்களுக்காக உயிர்துறந்த இயேசுவே! எங்கள் வாழ்வில் உமது விருப்பத்தை அறிய செய்தருளும்.**

**பதிமூன்றாம் நிலை**
**இயேசுவின் உடலை அவர் அன்னையின் மடியில் கிடத்துகிறார்கள்**

அனைத்தையும் தன் உள்ளத்தில் பதித்து வைத்திருந்த அன்னை. இதோ மகனின் நினைவலைகளை தன் உள்ளத்திலும், அவரது பூதவுடலை தன் மடியிலும் சுமக்கிறார். நமது விசுவாச வாழ்வில் நமக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டு அன்னை மரியா. அந்த அன்னை தனது காட்சிகளின் வழியாக சிலுவை அடியில் ஈன்றெடுத்த மனுக்குலத்தின் விசுவாச வாழ்விற்கு பல செய்திகளை வழங்கி வருகிறார். அவற்றுள் சில:
"மக்கள் எவ்வளவு காலம் கீழ்ப்படிய மறுப்பார்கள்; கீழ்படியவில்லை என்றால் நான் பிடித்திருக்கும் என் மகனுடைய கரத்தை விட்டுவிடும்படி வற்புறுத்தப்படுகிறேன். என் மகன் உங்களைக் கைவிடாதிருக்க வேண்டும் என்றால் நான் அவரை நோக்கி இடைவிடாது பரிந்துரைப்பது அவசியம். நீங்களோ இதையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. இப்படியே நடந்துக்கொண்டிருந்தால் நாட்டில் நோய், பஞ்சம், போர் முதலியவை வந்து அச்சுறுத்தும். தினமும் குறைந்தது ஒரு கர்த்தர் கற்பித்த செபமும், ஒரு மங்கள வார்த்தை செபமும் சொல்லுங்கள். நேரம் இருக்கையில் அதிகமாக சொல்லி செபியுங்கள். மக்கள் மனம் திரும்புவார்களானால் பாறைகள் கோதுமைக் குவியலாக மாறும். பயிர் செய்யாமலேயே அனைத்தும் விளையும்" நமதன்னை பிரான்சு நாட்டில் உள்ள சலேத்து நகரில் காட்சி தந்த போது உரைத்தவை. நாமே அமல உற்பவம் என்று தன்னை அறிவித்த லூர்து நகரில் பெர்னதெத்திடம் "பாவிகள் மனந்திரும்ப செபி" என்றார். ஒருமுறை கிறிஸ்தவர்களின் சகாய அன்னை புனித வெரோணிக்காவுக்கு தோன்றி: "வெரோணிக்கா உனக்கு எழுதப்படிக்க தெரியவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். நான் சொல்லப்போகும் மூன்று மிக சாதாரணமான ஆனால் முக்கியமான காரியங்களை அறிந்தால் போதும். முதலாவது: பற்றுதல்களில் தூய்மை. அதாவது உனது முழு இதய நேசம் முழுமையையும் கடவுள் மீது மட்டுமே வைத்திரு. அவரது படைப்பை அவருக்காக அன்பு செய். இரண்டாவது: பிறரது பாவக்குறைகளைக் கண்டு முணுமுணுக்கலாகாது. அவற்றை சகித்து கொண்டு அவர்களை மன்னிக்க வேண்டும். அவர்களுக்காக செபிக்க வேண்டும். மூன்றாவது. என்னுடைய மகனின் பாடுகளையும் மரணத்தையும் பற்றி ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது தியானிக்க வேண்டும் என்றார். பாத்திமாவில் காட்சி தந்த அன்னை "செபமாலை சொல்லுங்கள் – உலகம் மனந்திரும்பும், அமைதி நிலவும்" என்றார். இந்த அறிவுரைகள் நமக்கும் பொருந்தும். நாம் இவற்றை நம் விசுவாச வாழ்வில் கடைப்பிடிக்கிறோமா? சிந்திப்போம்...
செபம்: மரியின் மைந்தனே இயேசுவே! விசுவாச வாழ்வில் உம் அன்னையைப் போல நாங்கள் வாழ செய்யும்.

**பதினான்காம் நிலை**
**இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்**

**இங்கு இயேசு புதைக்கப்படவில்லை. விதைக்கப்படுகிறார். இதோ நாம் நமது பயணத்தின் இறுதி நிலையை அடைந்துவிட்டோம். இறுதிநிலை என்றாலும், நம் விசுவாச வாழ்விற்கு இது தான் முதல் நிலை. நான் கண்ட எத்தனையோ சிலுவைப் பாதைகளில் இதுவும் ஒன்று என்று எடுத்துக்கொள்ளாமல், விசுவாச வாழ்விற்கு பாடம் ஒன்றை நான் தியானித்த இந்த நிலைகளில் இருந்து எடுத்துச்செல்கிறேனா? சிந்திப்போம். நாமும் புனிதராகலாம். புனிதர் ஆவதற்கு பெரிய தகுதி ஒன்றும் தேவையில்லை. புனித பேதுரு இயேசுவை மும்முறை மறுதலித்தவர், புனித தோமா உயிர்த்த இயேசுவை காணாமல் நம்பமாட்டேன் என்றுரைத்தவர், புனித பவுல் பல விசுவாசிகளை கொன்று குவித்தவர், புனித மகதலா மரியா விபச்சார வாழ்க்கை நடத்தியவர், லீமா நகரின் புனித ஜான் மசியாஸ் வாயில் காவலராக இருந்தவர், புனித இசிதோர் ஒரு ஏழை விவசாயி, புனித பக்கிதா ஒரு அடிமைப்பெண், புனித தோமினிக் சாவியோ ஒரு சாதாரண மாணவன். திருச்சபை அரசர்கள் பலரை புனிதர்களாக அங்கீகரித்துள்ளது, பிச்சையெடுத்தவர்களுக்கும் புனித நிலை வழங்கப்பட்டுள்ளது. படித்த மேதைகளும் புனிதர் வரிசையில் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர், ஒன்றும் தெரியாத நல்ல உள்ளங்களும் புனிதர்களாகி இருக்கின்றனர். இவர்கள் எவ்வாறு புனிதர்களானார்கள் என்ற கேள்விக்கு 1 யோவான்:3:3ல் நமக்கு பதில் கிடைக்கிறது. "அவரை எதிர்நோக்கி இருக்கும் அனைவரும் அவரைப்போல் தம்மையே தூய்மையாக்க வேண்டும்". தங்கள் விசுவாச வாழ்வாலும், இறைவன் மீதும் பிறர் மீதும் கொண்டிருந்த எல்லையில்லா அன்பினாலும், எதையும் இறைவனுக்காக இழக்கும் ஆற்றல் கொண்ட புனிதர்களின் உதவியை நாம் தினமும் நாடுகிறோம். ஆனால் அவர்கள் வாழ்ந்தது போல வாழ முற்படுகிறோமா? நாம் புனிதராக செய்ய வேண்டியவை இரண்டே:**

- **எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை அன்பு செய்வது**
- **தன்னைத் தானே அன்பு செய்வது போல பிறரையும் அன்பு செய்வது**

**நமக்கோ விண்ணகமே தாய் வீடு. அந்த தாய் வீட்டை அடைவதற்கான ஏணி விசுவாசமே! எதிர்நோக்கி காத்திருக்கும் நாம் நம்பிக்கை கொண்டவராய் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருப்போம். திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறை வேண்டலிலும் உறுதியாக நிலைத்திருப்போம். புனிதர்கள் ஆவோம். இந்தப் கல்வாரிப் பாதை என்னும் புனித பயணம் – மண்ணக வாழ்வில் புனித பயணம் மேற்கொள்ளவும், எதிர்நோக்கியுள்ள விண்ணக வாழ்விற்கு புனித பயணமாகவும் அமைவதாக.**
**செபம்: புனிதர்களை ஈர்க்கும் இயேசுவே! எம் புனிதப்பயணத்தில் எம்மோடு தங்கும்.**